[20th March 1963

திரு. கே. ஏ. மதியழகன் : "பிராம்மண சமூக மாணவர்கள் நலன்களை இந்த சர்க்கார் புறக்கணிக்கிறது" என்பது கேள்வி கேட்ட கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் . கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த அபிப்பிராயத்தைக் கொள்ளலாம். அதற்குப் பிரசாரமும் செய்ய லாம். அவர்களுடைய பிரசாரம் அலாதியானது என்பது எனக்குத் தெரியும் .

மூங்கில் வளர்ப்பு (கொல்லி மலை)

* 310 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டு வேலு : கனம்** கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா — சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியில் மூங்கில் காடுகளை வளர்க்கத் திட்டமுண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம், கொல்லி மலைப் பகுதியில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 50 ஏக்கர் நிலத்தில் மூங்கில் நடப்படுகிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இது வரையில் எத்தனை ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : எங்கே பயிர் செய்யப்பட்டது என்பதைக் கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டும்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கொல்லி மலைப் பகுதியில் இதுவரை எத்தனை ஏக்கரில் மூங்கில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இது வரைக்கும் கொல்லி மலைப் பகுதியில் 150 ஏக்கர் வரைக்கும் மூங்கில் பயிர் செய்யப் பட்டிருக்கிறது.

Watr-supply (scarcity areas)

* 311 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a special Investigation Division has been established for the purpose of assessing the problem of water-supply in the backward and scarcity areas; and

(*b*) the nature of assistance offered by the Centre in respect of such schemes?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) இது விஷயமாக இந்திய அரசாங்கத்துக்கும் கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. க. ர. நல்லசிவம் : இதைப்பற்றிய விவரம் சபைக்குக் கொடுக்கப் படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுதுதான் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். தகவல் கிடைத்த பிறகுதான் இங்கே வைக்க முடியும்.

Drinking water-supply (Dharmapuri)

* 312 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is a proposal to take water from the South Pennaiyar at Kaveripatnam to Dharmapuri in Salem district for the supply of drinking water to Dharmapuri Town; and

(*b*) if so, the details thereof?